**கொமரசாமிக் கவுண்டர் பதின்ம மேல்நிலைப்பள்ளி - குருமந்தூர்**

**முன் காலாண்டுத்தேர்வு - செப்டம்பர் -2023**

**பத்தாம்வகுப்பு**

**நேரம் : 3.00 மணி** **தமிழ்** **மதிப்பெண்கள் : 100**

**பகுதி - I (மதிப்பெண்கள் : 15)**

குறிப்பு : I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 15 X 1 = 15

II) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ………… இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ……………

அ) அமைச்சர் , மன்னன் ஆ) அமைச்சர் , இறைவன்

இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

2. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

ஈ) அங்கு வறுமை இல்லாததால்

3. பரிபாடல் அடியில் “ விசும்பும் இசையும் “ என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் , புகழையும்

இ) வானத்தையும் , பூமியையும் ஈ) வானத்தையும் போரொலியையும்

4. “ சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி ” என்னும் அடியில் பாக்கம் என்பது.....

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

5. பொருந்தும் விடைவரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ) கொண்டல் - 1. மேற்கு

ஆ) கோடை - 2. தெற்கு

இ) வாடை - 3. கிழக்கு

ஈ) தென்றல் - 4. வடக்கு

அ) 1 , 2 , 3 , 4 ஆ) 3 , 1 , 4 , 2 இ) 4 , 3 , 2 , 1 ஈ) 3 , 4 , 1 , 2

6. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது --- தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே ……….

அ) பாடிய : கேட்டவர் ஆ) பாடல் : பாடிய

இ) கேட்டவர் : பாடிய ஈ) பாடல் : கேட்டவர்

7. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு

அ) இந்தியா ஆ) சீனா இ) மலேசியா ஈ) அமெரிக்கா

8. “ விசும்பில் ஊழி ஊழ்ஊழ் செல்லக்
கருவளர் வானத்து இசையில் தோன்றி
உருஅறி வாரா ஒன்றன் ஊழியும் ;
உந்துவளி கிளர்ந்த ஊழிஊழ் ஊழியும்”.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

மேழே கொடுக்கப்பட்டுள்ள பாடலில் ஊழ்ஊழ் என்பதன் இலக்கணக்குறிப்பு

அ) விளித்தொடர் ஆ) அடுக்குத்தொடர்

இ) எழுவாய்த் தொடர் ஈ) வினைமுற்றுத் தொடர்

9. பரஞ்சோதி முனிவரால் இயற்றபடாத நூல்

அ) கந்தர் கலிவெண்பா ஆ) வேதாரண்யப் புராணம்

இ) திருவிளையாடற்ப் போற்றிக் கலிவெண்பா ஈ) திருவிளையாடற்புராணம்

10. "பெரிய மீசை சிரித்தார்" இச்சொல்லில் தொகைவகை யாது?

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

11. செவ்வழிப்பண், பஞ்சுரப்பண் முதலியனவற்றுக்குரிய திணைகள் முறையே

அ) நெய்தல், பாலை ஆ) குறிஞ்சி, முல்லை

இ) மருதம், நெய்தல் ஈ) மருதம், பாலை

12. மேரி மெக்லியோட் பெத்யூன் என்னும் அமெரிக்கக் கல்வியாளரின், வாழ்க்கையை 'உனக்குப் படிக்கத் தெரியாது' என்ற தலைப்பில் நூலாகப் படைத்தவர்

அ) அகிலன் ஆ) கமலாலயன் இ) கீதாலயன் ஈ) ஜெயகாந்தன்

13. .................. இல் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழா நாயகர் என்ற சிறப்பை ஸ்டீபன் ஹாக்கிங் பெற்றார்.

அ) 2010 ஆ) 2005 இ) 2007 ஈ) 2012

14. இலங்கை தந்த புயலின் பெயர்

அ) அக்னி ஆ) ஆகாஷ் இ) கஜா ஈ) ஜல்

15. கேட்க வேண்டிய பாடல், சொல்லத் தக்க செய்தி ஆகியன................................

அ) பெயரெச்சங்கள் ஆ) கூட்டுநிலைப் பெயரெச்சங்கள்

இ) கூட்டுநிலை வினையெச்சங்கள் ஈ) வினையெச்சங்கள்

## பகுதி - ஆ (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க : (21 கட்டாய வினா) 4 X 2 = 8

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு உண்ண உணவு கொடுத்து வரவேற்பது விருந்தோம்பல்.

ஆ) காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலத்திற்குரிய முதற்பொருட்கள் ஆகும்.

17. கலைச்சொற்களைத் தமிழாக்கம் தருக.

அ) Conversation ஆ) Cosmic rays

18. சாந்தமான ஒருபிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

19. அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

20. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

21."விடும்" - என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி: 5 X 2 = 10

22. மொழிபெயர்ப்பு பற்றி மணவை முஸ்தப்பா கூறுவது யாது?

23. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

தேன் , விளக்கு , மழை , விண் , மணி விலங்கு , வான் , பூ , மேகலை , செய் , பொன்.

24. வசன கவிதை - குறிப்பு வரைக.

25. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) விடு - வீடு ஆ) மடு - மாடு

26. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.

உழவர்கள் மழையில் உழுதனர்

முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

27. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

28. வழுவமைதி என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

பகுதி - III ( மதிப்பெண்கள் : 18 )

பிரிவு - I 2 X 3 = 6

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்கவும்:

29. சோலைக் காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

30.பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு வேலைக்கு செல்லும் நண்பனிடம் கல்வியின் சிறப்பினை எவ்வாறு எடுத்துரைப்பீர்?

31. பத்தியைப் படித்து பதில் தருக.

ஐ.நாஅவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்து கொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு எனபது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது,ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது விளக்குவது என்றே சொல்லப்படுகிறது. ஐ.நாஅவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்கு தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார்.

ஒருவர் பேசுவதைக் காதணி கேட்பியில் கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார்.அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணி கேட்பியை எடுத்துப் பொருத்திக் கொண்டு அவரது மொழியில் புரிந்து கொள்வார்.

வினாக்கள் :

1. மொழிபெயர்ப்பு என்பது யாது ?
2. மொழிபெயர்ப்பை ஆங்கிலத்தில் எவ்வாறு குறிப்பிடுவர் ?
3. இப்பத்திக்கு பொருத்திய தலைப்பொன்று தருக.

பிரிவு – 2

இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்கவும்: 2 X 3 = 6



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

32. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

33.தமிழ்ழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை எழுதுக.

34."அருளைப்பெருக்கி" எனத்தொடங்கும் நீதிவெண்பாபாடல்

பிரிவு – 3

<u>இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்கவும்:</u> <u>2 X 3 = 6</u>

35.வினாவின் வகைகளை எடுத்துக்காட்டுடன் வரிசைப்படுத்துக.

36. விலங்கொடு மக்கள் அனைவர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் - இக்குறட்பாவில் அமைந்த பொருள்கோளை விளக்குக.

37. அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு - இக்குறட்பாவிற்கு அலகீட்டு வாய்ப்பாடு தருக.

பகுதி - IV (மதிப்பெண்கள் – 25)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 X 5 = 25

38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

அல்லது

ஆ) எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் வரிசைப்படுத்துக.

39. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலைக்கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப்பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக்கண்டு கவினுற எழுதுக.



41. கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

பெயர்: சுரேஷ்

தந்தைபெயர் : மாறன்

முகவரி : கதவு எண் 370 , ராஜ வீதி , ஈரோடு.

42.மொழிபெயர்க்க :

The golden sun gets up early in the morning and stars is bright rays to fade away the dark. The milky clouds start their wandering the colourful birds starts twitting their morning melodies in precussion. The cute butterflies dance around the flowers . The flowers fragrance fills the breeze . The breeze gently blows everywhere and makes every thing pleasant.

பகுதி - v

43. அ) அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப்பயணம் என்னும்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

தலைப்பில் கற்பனை கதை ஒன்று எழுதுக.

அல்லது

ஆ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்தாய் வாழ்த்துப்பாடலையும் , பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

44. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்க்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவத்தற்கான உரை குறிப்புகளை எழுதுக.

அல்லது

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதையின் வாயிலாக விளக்குக.

45. அ) குறிப்புகளைக்கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.

முன்னுரை - முயற்சி - முயற்சியின் பெருமை - முயற்றின்மையால் வரும் இழிவு - ஊமையும் வெல்லும் முயற்சி - முடிவுரை.

அல்லது

ஆ) குறிப்புகளைக்கொண்டு பொருட்காட்சிக்குச் சென்ற நிகழ்வைக் கட்டுரையாக எழுதுக.

முன்னுரை - பொருட்காட்சி வகைகள் - மதுரையில் அரசு பொருட்காட்சி - துறை அரங்குகள் - பொழுதுபோக்கு விற்பனை - பொருட்காட்சியால் விளையும் நன்மைகள் - முடிவுரை.

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com